செ.செ.எண்: 182 நாள்: 16-03-2020

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## தஞ்சாவூர் வீட்டுவசதிப் பிரிவு

### தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் குடியிருப்பு அலகுகள் ஒதுக்கீடு பெற்றுள்ளவர்களில், வட்டிச்சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் உள்ள ஒதுக்கீடுதாரர்களுக்கு மாதத் தவணை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி, முதலாக்கத்தின் மீதான வட்டி ஆகியன முழுவதுமாகவும், நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தின் மீதான வட்டியில் வருடத்திற்கு 5 மாத வட்டி மட்டும் கணக்கிட்டு தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அரசால் வழங்கப்பட்ட இச்சலுகை எதிர் வரும் 31–03–2020 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும். வட்டி தள்ளுபடி திட்டத்திற்கு தகுதியான ஒதுக்கீடுதாரர்களுக்கு, ஏற்கனவே நிலுவை தொகைக்கான தாக்கீது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே தகுதியான ஒதுக்கீடுதாரர்கள் இந்த பொன்னான வாய்ப்பினை பயன்படுத்தி தஞ்சாவூர் வீட்டுவசதிப் பிரிவு அலுவலகத்தை அணுகி தங்களது ஒதுக்கீட்டிற்கான நிலுவைத் தொகையினை ஒரே தவணையில் செலுத்தி விற்பனை பத்திரம் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. 31–03–2020–க்கு பின்னர் நிலுவைத் தொகையினை செலுத்தும் ஒதுக்கீடுதாரர்களுக்கு மேற்படி வட்டித் தள்ளுபடி சலுகை கிடைக்கப்பெறாது என்பதால், இந்த அரிய வாய்ப்பினை தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10/03/2020

செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்
தஞ்சாவூர் வீட்டு வசதி பிரிவு

10/3/2020